1971 டிசம்பர் 18]

விளக்குகள் போடவில்லை. அதுசம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு செய்ய இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றி நீங்கள் எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் மீதான விவாதத்தின்போது பேசியதாக அறிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, எந்தெந்தத் தேதிகளில் எந்தெந்தக் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும் என்பதைப்பற்றி பேரவையில் குறிப்பிட்டேன். அந்தச் சமயத்தில் கனம் உறுப்பினர் அவையில் இல்லை.

Number plates in cars.

* 590 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the car number plates in Tamil Nadu will be changed shortly to both English and Tamil ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கார்களின் இலக்கங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்ற யோசனையை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தியிருக்கிறதா? அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் இது எடுத்துக் கூறப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில், கார்களின் இலக்கங்களை வட்டார மொழியிலும் ஆங்கிலத்திலும் இலக்கப் பலகைகளில் எழுத வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் டெல்லி மாநகராட்சியின் பொறுப்பு ஜனசங்கத்தினர் வசம் இருக்கிறது. டெல்லி மாநில அமைச்சர் மட்டும், இந்தி ஆட்சி மொழியாக இருக்கிற காரணத்தால் இலக்கப் பலகை இந்தியில் எழுதினால் போதும் என்று குறிப்பிட்டார். பெரும்பான்மையான மாநில அமைச்சர்கள் வட்டார மொழியிலும் ஆங்கில மொழியிலும் இருந்தால், அது வெளிநாட்டுப் பயணிகளுக்குக்கூட வசதியாக இருக்கும் என்று விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது. முடிவுகள் இன்னும் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, அறிவிக்கப் படவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அப்படி முடிவு தெரிந்தபின்னர் இரண்டு மொழிகளிலும் பலகை எழுத வேண்டுமென்று இந்த அரசு கட்டாயப்படுத்துமா? அல்லது இப்போது இருக்கிற ஏற்பாடே போதும் என்று இருக்குமா?

1972 டிசம்பர் 18]

இருப்பது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் அதைச் சரியாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அங்கே காய்கறிகள் உற்பத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டேன். வெளியில் இருந்து வருகிற காரணத்தினால் வாடி வதங்கி இருக்கலாம். இனி வாடி வதங்காமல் இருக்கும் காய்கறிகள் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

THRIU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the investment made to raise the garden and the loss occurred to the Government ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தப் பண்ணைக்கு தொடரும் செலவாக 1968-69-இல் ரூ. 16,170-ம் 1969–70–இல் ரூ. 15,340-ம் 1970-71-இல் ரூ. 3,590–ம் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

தொடராச் செலவாக 1968-69-இல் ரூ. 17,480-ம், 1969-70-இல் 9,560–ம், 1970-71-ல் ரூ. 420-ம் செலவாகியிருக்கிறது.

இந்தப் பண்ணையில் இருந்து கிடைத்த காய்கறிகள் அளவும், வருமானமும் பார்த்தால் 1968-69-இல் 7 டன், 278 கிலோகிராம் உற்பத்தியாகியிருக்கிறது. அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 3,610 ஆகும். 1969-70-இல் 55 டன் 768 கிலோகிராம் உற்பத்தியாகியிருக்கிறது. அதன் மதிப்பு ரூ. 6,280. 1970-71-இல் 400 கிலோகிராம் உற்பத்தியாயிற்று. அதன் மதிப்பு ரூ. 590 ஆகும்.

அரசியல் தியாகிகளுக்கு வீடுகள்

* 587. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசியல் தியாகிகளில் வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உள்ளது.

திரு. எம். செல்வராஜ் : நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முனைவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாநில அரசு ஊழியர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.